**10.07.2019.**

**இ.ம.எண்.568/2018, இ.ம.எண்.277/2018**

**அ.வ.எண்.16/2018**

**குறுக்கு விசாரணை வா.சா.2**

நான் வாதி நிறுவனத்தில் அக்டோபர் மாதம் 2014ம் வருடத்தில் இருந்து உதவி மேலாளராக, (மனிதவளத்துறை) பணி புரிகின்றேன். இவ்வழக்கு எவ்வளவு விஸ்தீரணம் மற்றும் சர்வே எண்களுக்காக தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் எனக்கு தற்போது சர்வே எண்கள் ஞாபகத்தில் இல்லை. ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். ஒரு சர்வே எண் இரண்டு சர்வே எண்களாக பிரிக்கபட்டுள்ளது. விஸ்தீரணமும் ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். வாதி நிறுவனத்தில் சொத்திற்கு தெற்கு பக்கத்தில் தான் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தின் சொத்தில் 4 எல்லைகள் குறிப்பிட்டு சர்வேகல் பதிக்கபட்டுள்ளதா என்றால் பார்வைக்குட்பட்டதாக எதுவும் இல்லை. நான் நிறுவனத்தின் பணிபுரியும் காலத்தில் எனது நிறுவத்தின் சொத்துக்களான தாவா சொத்தினை அளந்துள்ளார்களா என்றால் அளந்துள்ளோம். வழக்கு தாவா சொத்தினை சர்வேயர் முன்னிலையில் அளந்தோம். பிரச்னைக்கு பின்பு தாசில் தார்

முன்னிலையில் அளந்ததோம். சர்வேயர் அளந்த பின்பு நான்கு பக்க எல்லைகளை குறிப்பிட்டு நான்கு பக்க சர்வே கல் நடப்பட்டதா என்றால் எந்த பக்கம் பிரச்னை ஏற்பட்டதோ அங்கு மட்டும் சர்வே கல் நடப்பட்டது. வாதி நிறுவனத்தின் சொத்தினை முழுமையாக அளக்கபட்டதா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் இடம் அளக்கபட்டு அதன் படி எங்களது நிலத்தில் கல் பதிவு செய்தார்கள். சர்வேயர் யார் அழைத்து நிலத்தை அளவீடு செய்தார் என்றால் நாங்கள் அளக்க பணம் கட்டி இருந்தோம். பிரதிவாதி அளக்க முயன்றாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்துக்கள் முழுமையாக அளக்கபட்டதா என்றால் பிரதிவாதியின் இடம் அளக்கபட்டது. எங்களது நிலம் அளக்கபடவில்லை. சர்வேயர் நிலத்தினை அளவீடு செய்யும் போது ஏன் வழக்கு தாவா சொத்தினை முழுமையாக அளக்கவில்லை என்றால் நாங்கள் சர்வேயரிடம் கூறினோம். ஆனால் அவர் அளக்கவில்லை. எங்களது நிறுவனத்திற்கும் எதிர் மனுதாரரின் கடைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தோராயமாக 1 கி.மீட்டர் தூரம் இருக்கும். 5.2.2018ம் தேதி இவ்வழக்கு தாவா தாக்கல் செய்யபட்டு உறுத்துகட்டளை பெறப்பட்டது என்றால் சரிதான். உறுத்துகட்டளை பெறப்பட்ட விவரம் பற்றி பிரதிவாதிக்கு எந்த தேதியில் அறிவிப்பு கொடுக்கபட்டது என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது. 7.2.2018 ம் தேதி தான் உறுத்துக்கட்டளையின் அறிவிப்பு நீதிமன்றத்தின் மூலம் பிரதிவாதிக்கு கொடுக்கபட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் 6.2.2018ம் தேதி பிரதிவாதி மற்றும் 20 நபர்களுடன் சேர்ந்து வழக்க தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 20 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தில் இருந்த சுவற்றினை இவ்வழக்கின் எதிர் மனுதாரர் மற்றும் அவருடன் சேர்ந்த நபர்கள் இடித்துவிட்டு அங்கு இருந்த தண்ணீர் எடுக்கும் போர்வெல்லை சேதப்படுத்திவிட்டார்கள். நான் அங்கு சென்ற பின்பு எதிர்மனுதாரர்கள் மேற்கூறிய சம்பவத்தை செய்தார்களா என்றால் அங்கு சம்பவம் நடந்துகொண்டிருந்ததை கேள்விபட்டு நான் அங்கு சென்றேன். தாவா சொத்தில் மேலே சங்கதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள போர் எந்த வகையான போர்பம்ப் என்றால் நீர்மூழ்கி போர் (சப்மெர்சிபல்) ஆகும். அதற்கு பின்பு தொலைபேசி மூலமாக காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தேன். எனது நிறுவனத்தின் மதில் சுவற்றினை முழுவதுமாக இடித்துவிட்டார்களா என்றால் சரிதான். போர்வெல் யாருடைய நிலத்தில் இருந்தது என்றால் வாதியின் நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் தான் இருந்தது. போர்வெல் மதில் சுவருக்கு

எந்த திசையில் இருந்தது என்றால் வடக்கு பக்கமாக இருந்தது. சுமார் 3 அடிக்கு மதில் சுவரில் இருந்து தள்ளி வாதிக்கு சொந்தமான இடத்தில் இருந்தது. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் பிரதிவாதிகள் போர் இருந்த இடத்தில் மண் கொட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவ்வாறு மண் கொட்ட அவசியம் ஏன் என்றால் பிரதிவாதிகள் மதில் சுவற்றினை அவர்களே இடித்து விட்டபடியால் மண் கொட்டினார்கள். பிரதிவாதிகள் அவ்வாறு மதில் சுவரை இடித்து மண் கொட்ட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. உறுத்துக்கட்டளை நீதிமன்றத்தில் பெற்ற பின்பு இரண்டு நாட்கள் கழித்து காவலர்கள் உதவி தேவை என்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவின் அறிவிப்பு எதிர் மனுதாரர்களுக்கு தெரிவிக்கபட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரச்னை நடந்த சமயத்தில் எதிர் மனுதாரர்களுக்கு உறுத்துகட்டளை பெற்றுள்ளோம் என்று உத்தரவை காண்பித்தோம். வாய்மொழியாக தான் கூறினோம். எதிர் மனுதாரருக்கு எனக்கு சொந்தமான இடத்தில் அத்துமீறி நுழைய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர்கள் வாதிக்கு சொந்தமான மதில் சுவரை உடைக்கவில்லை. நாங்கள் தான் எங்களுக்கு சொந்தமான மதில் சுவரை உடைத்தோம் என்றால் சரியல்ல. தாவா

சொத்தில் இருந்து நீர்மூழ்கி மோட்டாரினை நாங்கள் தான் வெளியே எடுத்தோம் என்றால் அது பழுதாகிவிட்டதால் நாங்கள் தான் வெளியே எடுத்தோம். மோட்டார் எடுக்கபட்ட படியால் அந்த இடம் பள்ளம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் ம.சா.ஆ.1 புகைப்படங்களில் மேலே உள்ள கூரை எதிர் மனுதாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் எதிர் மனுதாரார் உள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 2ம் புகைப்படத்தில் உள்ள மோட்டார் நீர்மூழ்கி மோட்டாரா அல்லது தரைக்கு மேலே இருக்கும் மோட்டாரா என்றால் அதை பற்றி என்னால் கூறமுடியாது. புகைப்படத்தில் மதில் சுவர் உள்ளது என்றால் மேலே உடைக்கபட்டுள்ளது. அதற்கு பின்பு முழுவதுமாக உடைக்கபட்டுள்ளது. மதில் சுவர் முழுவதாக உடைக்கபட்டதற்கு புகைப்படம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த புகைப்படம் 5.2.2018 அன்று தாக்கல் செய்யபட்டது. அதன் பின்பு சுவற்றினை முழுவதுமாக உடைக்கபட்டது. அதன் புகைப்படம் தற்போது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 2ம் புகைப்படத்தில் உள்ள மோட்டார் இவ்வழக்கு தாவா சொத்தில் உள்ள மோட்டார் இல்லை. வேறு இடத்தில் எடுக்கபட்ட புகைப்படம் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டுள்ள

புகைப்படத்தின் படி மனுதாரர் எதிர் மனுதாரர் மதில் சுவரை இடித்துவிட்டபடியால் எதிர் மனுதாரர் அதனை மீண்டும் கட்டி உள்ளார் என்பவது புலப்படுகிறது என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

**மனுதாரரால் தாக்கல் செய்யபட்டுள்ள புகைப்படத்தில் மனுவில் இடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள மதில் சுவருக்கு முன் பக்கத்தில் சுவர் கட்டபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதிதாக கட்டபடும் சுவர் யாரால் கட்டபட்டது என்றால் எதிர் மனுதாரரால் கட்டபட்டது. கட்டிகொண்டு இருக்கும் போது எடுக்கபட்ட புகைப்படம் தான் இம்மனுவில் தாக்கல் செய்துள்ளேன். புதிதாக கட்டபட்டுள்ள சுவர் மனுதாரர் இடத்தில் உள்ளதா அல்லது எதிர் மனுதாரர் இடத்தில் உள்ளதா என்றால் மனுதாரர் இடத்தில் தான் உள்ளது.**

தற்போது நிலத்தினை அளவு செய்தால் மதில் சுவர் யாருடைய இடத்தில் உள்ளது என்பது தெரிந்துவிடும் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் புகைப்படத்தில் உள்ள நபர்கள் எனது நிறுவனத்தை சார்ந்தவர்களா என்றால் அதில் ஒருவர் மட்டும் எனது நிறுவனத்தை சார்ந்தவர். மற்ற நபர்களை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம்

காட்டபடும் புகைப்படத்தில் கீழே உள்ள கடை யாருடையது என்றால் எதிர் மனுதாரர் உடையது. அந்த புகைப்படத்தில் எதிர் மனுதாரரின் கடையின் கூரை இறக்கபட்டதா என்றால் இடிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு அந்த கூரை இறக்கபட்டு எதிர் மனுதாரரால் போடப்பட்டது. மனுதாரரால் எங்களது கூரைக்கு மேல் போடப்பட்டது. புகைப்படத்தில் கூரையின் உள்பக்கம் தான் மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். சுவர் இடிப்பதற்க 10 நாட்களுக்கு முன்பு மதில் சுவருக்கு மேல் எதிர் மனுதாரரால் கூரை போடப்பட்டு இறக்கபட்டுள்ளது என்று கூறுவது வழக்குக்காக கூறுகின்றேன் என்றால் சரியல்ல. புகைப்படத்தில் மதில் சுவரை உடைக்கும் நபர் என்நிறுவனத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. மனுதாரர் நிறுவனத்தின் ஆட்கள் தான் மதில் சுவரை உடைக்கின்றார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டபடும் புகைப்படம் எ.ம.சா.ஆ.1 ஆகும். வாதி நிறுவனம் தான் எதிர் மனுதாரருக்கு சொந்தமான மதில் சுவரை இடித்ததால் எதிர் மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிர் மனுதாரருக்கு சொந்தமான சுவரினை மனுதாரர் தரப்பில் இடித்த விவரம் தெரிந்து கொண்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரை மிரட்டி வசப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் நீதிமன்றத்தின்

உத்தரவு பெற்று பின்பு சுவரினை இடித்து அவர் மீது பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் நீதிமன்ற உத்தரவினை மதிப்பவர் ஒரு காலத்திலும் உத்தரவினை மீறி செயல்படவில்லை என்றால் சரியல்ல. அவர் நீதிமன்ற உத்தரவினை மதிக்கவில்லை. வாதி நிறுவனம் 8.5.2017. 2.2.2018, 3.2.2018 ஆகிய தேதிகளில் கொடுத்த புகாரின் மீது காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தினை அணுகி பெறப்பட்ட உத்தரவு தான் ம.சா.ஆ.4 என்றால் சரிதான். மேலே குறிப்பிடப்பட்டுள்ள 3 தேதிகளும் இம்மனு தாக்கல் செய்வதற்கு முன்பு என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் பெயரில் இன்றைய தேதி வரை முதல் தகவல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எதிர் மனுதாரர் மீது இவ்வழக்கு பிரச்னைக்குரிய புகார்கள் தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் எந்த தவறும் செய்யாத காரணத்தினால் தான் அவர் மீது எந்த முதல் தகவல் அறிக்கையும் இன்றைய தேதி வரை பதிவு செய்யபடவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 இவ்வழக்கு தாவா சொத்தின் மீது மனுவில் கோரியபடி பிரச்னை ஏற்பட்ட பிறகு தாசில்தாருக்கு நிலத்தை அளக்க கொடுத்த மனு என்றால் சரியல்ல. முதலில் காவலர் துணையோடு

அளக்கபட்டது சரியாக அளக்கபட்டது சரியாக இல்லை என்று மறுமுறை அளக்க கொடுத்த மனு. ம.சா.ஆ.2ன் படி இம்மனு தாக்கல் செய்யும் நேரத்தில் தாவா சொத்தின் தஸ்தாவேஜ்கள் அளக்கபட்டு கல் பதிக்கவில்லை ஆகையால் எங்களது நிலத்தின் அளவை முழுமையாக தெரியாது என்பது புலனாகிறது என்றால் சரியல்ல. மனுவை தாக்கல் செய்யும் சமயத்தில் விஸ்தீரணம் மற்றும் அளவு தெரியும். அளவு தெரியும் என்ற சமயத்தில் மறு முறை எதற்காக மனுகொடுத்தோம் என்றால் சுவர் இடித்த பின்பு அந்த சுவர் எங்களுக்கு சொந்தமான இடத்தில் இருந்தது என்பதற்காக மனு கொடுத்தோம். மனு கொடுத்தபின்பு நிலம் அளக்கபட்டதா என்றால் இல்லை. மனுதள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.